**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. S A ENTERPRISES, OVER AN EXTENT OF 4.96.0 HA AT S.F.NOS. 139, 140/1A, 140/1B, 144/1A1, 144/1A2, 145/1A, 145/1B1, 145/1B2, 145/1B3, 145/2A, 145/2B1, 145/2B2, 145/3A, 145/4, 145/5A, 145/5B, 145/7A, 145/7B, 145/9A1, 145/9A2, 145/9B, 145/10 & 145/11, KUNDIYANTHANDALAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 27.02.2026 AT 12.00 NOON AT M/S. R.S.E MAHAL, MAMANDUR, POONGAVANA KUMARASAMY NAGAR, KANCHIPURAM TO VANDAVASI ROAD, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Selvi.L. Ambica Jain I.A.S., | : | Sub Collector, Cheyyar division Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai) |
| 2 | Er. A. Jothi Prakash | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 3 | Dr. S. Sugashini | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 4 | Er. K. Prem Kumar | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai. |
| 5 | Thiru. M. Tamilmani | : | Tahsildar, Vembakkam Taluk, Tiruvannamalai. |
| 6 | Thiru.K. Vijayaraghavan | : | Environmental Impact Assessment (EIA) Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri. |
| 7 | Public | : | 127 Nos. (Attendance enclosed as Annexure). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the Sub Collector, Cheyyar division, Tiruvannamalai, the general public, Revenue officials, Police department officials, Media persons and the proprietor of M/s. S A Enterprises, Rough Stone and Gravel Quarry who had

assembled for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of M/s. S A Enterprises, and. He further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 22.01.2026 in the Tamil and English daily newspapers, namely "Dinamalar" and "The New Indian Express." He also informed that public announcements had been made in and around Kundiyanthandalam Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may given their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The Sub Collector, Cheyyar division, inaugurated the public hearing meeting and requested the proponent (M/s. S A Enterprises) of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru. Vijayaraghavan, Environmental Impact Assessment Consultant of M/s. S A Enterprises Rough Stone and Gravel Quarry project from M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may express their views. He further requested that, before recording their views, the public should mention their name and their village name, before expressing their opinions.

Accordingly, the following public expressed their views and suggestions.

**1. Thiru. Muthu, Ex President of Village Panchayat, Kundiyanthandalam Village:**

Thiru. Muthu conveyed his greetings to the Sub Collector, Cheyyar, who had come to grant permission for the quarry, to the District Environmental Engineer, Tiruvannamalai, to the Tahsildar of Vembakkam Taluk, and to the general public. He stated that granting permission to Tvl. S.A. Enterprises Crusher would not cause any adverse impact to the village. However, he requested that the road be improved and that adequate safety measures be ensured for school children while they travel to and from school. He further stated that he has no objection to granting permission for the quarry.

**2. Thiru. M. Kumar, Kundiyanthandalam Village:**

Thiru. M. Kumar stated that nothing has been done for the development of agriculture. He requested that canals be excavated to resolve the water issues faced by farmers. He further stated that the roads in the village should be improved.

**3. Thiru. Dinakaran, Kundiyanthandalam Village:**

Thiru. Dinakaran stated that he has no objection to M/s. S.A. Enterprises establishing its unit at Kundiyanthandalam. He mentioned that the establishment of this quarry has created employment opportunities for more than 10 persons in the village. As a result, both educated and uneducated youth in the area have gained job opportunities. He further stated that the quarry owner has assured that any issues arising in the village and surrounding areas would be addressed and resolved by the them. He also mentioned that employment would be provided to 10 educated and uneducated persons in weighment and supervisory positions. He concluded by stating that he has no objection to the establishment of the quarry in the area and expressed his gratitude to all those who provided the opportunity to speak.

**4. Tmt. Amutha, Kundiyanthandalam Village:**

Tmt. Amutha stated that if the crusher is established in this location, it would cause severe and complete adverse impacts on the residents. She specifically mentioned that students from $6^{th}$ to $12^{th}$ standard have to go to the school located in Menallur village. If a stone quarry is operated along that route, there is uncertainty about when blasting may occur? and where the blasted stones may scatter? stating that a quarry should be located at least one kilometer away. she questioned whether it is appropriate to operate a quarry along the roadside?. She asked all the officials present, "If it were your own child, would you grant permission?" and requested to be excused if his words were inappropriate. she stated that there is no bus facility and no auto facility, and that students and residents have to walk, covering a distance of more than three kilometers up to Menalur. She expressed that they will not permit the crusher to function and requested that the quarry be stopped. she further stated that if it is established, they will continuously oppose it and protest whenever stone breaking activities take place. she mentioned that women from the village would go to higher authorities to express their opposition. she stated that there are eleven women's self-help groups in the area, and all the women from these groups would either travel by vehicle or walk to higher authorities to register their protest. she added that the officials present here would also be present there and should allow them inside and listen to their grievances. she reiterated that the crusher should not be allowed, as it affects children. she mentioned that livelihood is possible only if they travel to Kanchipuram by 7:00 a.m. She stated that agriculture in their village has already been destroyed, and if farming can still be carried out on the land, permission should be granted for agriculture and not for the crusher. she added that due to the lack of livelihood opportunities, they are compelled to travel more than 10 kilometres by bus. she concluded by stating that the crusher should not be allowed, and if it is established, they will continue to protest at any time.

**5. Tmt. Nagarani, Kundiyanthandalam Village:**

Tmt. Nagarani stated that they own two acres of land and that all the dust settles only on their agricultural fields. She mentioned that although the issue was raised last year, no action was taken, and even this year, despite raising the concern again, no one has responded. She questioned how they are expected to survive under such circumstances? She asked how they could live by working in stone-related activities and carrying stone and soil? She stated that no action has been taken on the concerns they have raised. She further mentioned that there are more than 50 houses in the area and that no benefits have been provided to them. She questioned whether any form of assistance could be provided through a welfare card and asked how women like them are expected to survive? She also questioned whether it is fair for their lands to be ruined in this manner? and requested that the authorities suggest a proper solution to address their issues.

**6. Thiru. Panneerselvam, Menalur Village:**

Thiru. Panneerselvam stated that he is the Vice President of the Parent-Teacher Association at Arignar Anna Government Higher Secondary School, Menallur. He mentioned that our request is more than 1,000 students are studying in their school, and that a majority of the students from Kundiyanthandal are studying at the Menallur school. He stated that their request is that water should be sprinkled on the roads during both morning and evening hours along the route used by the students, and that such a measure would be sufficient.

**After that, No representation continued from the public for providing comments.**

As no members of the public came forward to continue expressing their views, the Sub Collector, Cheyyar Division, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil

Nadu Pollution Control Board, Tiruvannamalai declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed M/s. S A Enterprises Rough Stone and Gravel Quarry Project, a total of 10 written petitions were received from the public, while no petitions were received directly or via email at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

6/3/26

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

6/3/26

**Sub Collector,**
**Cheyyar Division,**
**Tiruvannamalai.**

**District Collector,**
**Tiruvannamalai.**

**உத்தேசிக்கப்பட்ட தி/ள். S A எண்டர்பிரைசஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 139, 140/1A, 140/1B, 144/1A1, 144/1A2, 145/1A, 145/1B1, 145/1B2, 145/1B3, 145/2A, 145/2B1, 145/2B2, 145/3A, 145/4, 145/5A, 145/5B, 145/7A, 145/7B, 145/9A1, 145/9A2, 145/9B, 145/10 & 145/11, குண்டியாந்தண்டலம் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 4.96.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 27.02.2026 அன்று மாமண்டூர், பூங்காவன குமாரசாமி நகர், காஞ்சிபுரம் – வந்தவாசி சாலை, வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். R.S.E மஹாலில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | செல்வி.ல.அம்பிகா ஜெயின் இ.ஆ.ப, | : | சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி) |
| 2 | திரு. அ. ஜோதி பிரகாஷ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3 | முனைவர். சி. சுகாஷினி | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 4 | திரு. க. பிரேம் குமார் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5 | திரு.மு. தமிழ்மணி | : | வட்டாட்சியர், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. |
| 6 | திரு.K. விஜயராகவன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிகல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி. |
| 7 | பொதுமக்கள் | : | 127 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். S A எண்டர்பிரைசஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை, பொதுமக்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் மற்றும் தி/ள். S A எண்டர்பிரைசஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார்.மேலும், குண்டியாந்தண்டலம் கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து,

உத்தேசிக்கப்பட்டுள்ள (தி/ள். S A எண்டர்பிரைசஸ்), சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களை விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். S A எண்டர்பிரைசஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1. திரு. முத்து, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திரு. முத்து அவர்கள் கூறுகையில், இக்குவாரிக்கு அனுமதி வழங்க வந்துள்ள சார் ஆட்சியர் செய்யாறு அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திருவண்ணாமலை அவர்களுக்கும், வெம்பாக்கம் வட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தி/ள். S A எண்டர்பிரைசஸ் கிரஷருக்கு அனுமதி வழங்குவதால் ஊருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் சாலையை மேம்படுத்தவும், பள்ளி குழந்தைகள் பள்ளிக்கு சென்று வரும்போது போதுமான பாதுகாப்பை உறுதி செய்யவும் கேட்டுக்கொண்டார். மேலும், குவாரிக்கு அனுமதி வழங்குவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

**2. திரு. எம். குமார், குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திரு.எம். குமார் அவர்கள் கூறுகையில், விவசாயத்திற்காக எதுவும் செய்யப்படவில்லை. விவசாயிகளின் தண்ணீர் பிரச்சனையை தீர்க்க கால்வாய்களை வெட்டி தர வேண்டும். கிராமத்தின் சாலைகளை மேம்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**3. திரு. தினகரன், குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திரு. தினகரன் அவர்கள் கூறுகையில், தி/ள். S A எண்டர்பிரைசஸ் நிறுவனம் குண்டியாந்தண்டலத்திற்கு வருவதால் எவ்வித ஆட்சேபனை இல்லை. மேலும், இந்நிறுவனம் இங்கு அமைவதால் கிராமத்தில் 10 நபர்களுக்கு மேல் வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு உருவாகியுள்ளது. மேலும், ஊர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் எவ்வித பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அதை நிறுவன உரிமையாளரே சரி செய்து தருவதாக உறுதி அளித்துள்ளார். படித்த மற்றும் படிக்காத 10 நபர்களுக்கு எடைக்கட்டு மற்றும் மேற்பார்வையாளர் வேலை வழங்குவதாக தெரிவித்தார். இதனால், இந்நிறுவனம் இங்கு அமைவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை தெரிவித்து, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி என தெரிவித்தார்.

**4. திருமதி. அமுதா, குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திருமதி. அமுதா அவர்கள் கூறுகையில், இக்கிரஷர் இங்கு அமைந்தால் எங்களுக்கு முழுமையாக அதிக பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்தார். குறிப்பாக, ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் அனைவரும் மேனலூர் கிராமத்தில் உள்ள பள்ளிக்கு செல்ல வேண்டியுள்ளது என்றும் கூறினார். அந்த வழித்தடத்தில் கல் குவாரி அமைந்தால் எப்போது வெடி வெடிக்கும் என்பது தெரியாது; வெடிக்கும் போது கற்கள் எங்கு சிதறும் என்றும் தெரியாது எனக் கேள்வி எழுப்பினார். குவாரி குறைந்தது ஒரு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும்; ஆனால் சாலை பக்கத்திலேயே கல்குவாரி எடுக்கப்படுவது சரியா என்று வினவினார். "உங்கள் வீட்டுப் பிள்ளை என்றால் அனுமதி தருவீர்களா?" என்று அனைத்து அதிகாரிகளிடமும் கேள்வி எழுப்பி, தவறு இருந்தால் மன்னிக்குமாறு தெரிவித்தார். எங்களுக்கு பஸ் வசதி இல்லை; ஆட்டோ வசதி இல்லை; நடந்து தான் செல்ல வேண்டியுள்ளது என்றும், மூன்று கிலோமீட்டர் தாண்டி மேனலூர் வரை நடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது என்றும் குறிப்பிட்டார். இக்கிரஷர் வருவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; தயவு செய்து குவாரியை நிறுத்துங்கள் என்றும் கேட்டுக் கொண்டார். இது அமைந்தால் எப்போதும் எதிர்ப்பு தெரிவிப்போம்; கல் உடைக்கும் போது பிரச்சனை செய்வோம்; மேலிடத்திற்குச் சென்று மகளிர் அனைவரும் எதிர்ப்பு தெரிவிப்போம் என்றும் தெரிவித்தார். எங்கள் பகுதியில் பதினொன்று மகளிர் சுயஉதவி குழுக்கள் உள்ளன; அந்த அனைத்து குழுக்களிலும் உள்ள மகளிரும் வாகனத்தில் அல்லது நடந்து மேலிடத்திற்குச் சென்று எங்கள் எதிர்ப்பை தெரிவிப்போம் என்றும் கூறினார். அப்போது இங்கிருக்கும் அதிகாரிகளே அங்கும் இருப்பார்கள்; அவர்கள் எங்களை உள்ளே அனுமதித்து எங்கள் கோரிக்கையை கேட்க வேண்டும் என்றும் தெரிவித்தார். கிரஷர் வரக்கூடாது; குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டார். காலையில் 7.00 மணிக்கு காஞ்சிபுரம் சென்றால்தான் பிழைப்பு கிடைக்கிறது என்றும் கூறினார். எங்கள் ஊரில் விவசாயம் அழிக்கப்பட்டுள்ளது; இந்த நிலத்தில்

விவசாயம் செய்ய முடிந்தால் அதற்கே அனுமதி வழங்குங்கள்; கிரஷருக்கு அனுமதி வேண்டாம் என்றும் தெரிவித்தார். பிழைப்பிற்கான வழி இல்லாததால் தான் 10 கிலோமீட்டர் தாண்டி பஸ் பிடித்து செல்ல வேண்டிய நிலை உள்ளது என்றும் கூறினார். இக்கிரஷர் வரக்கூடாது; வந்தால் எப்போதும் போராட்டம் செய்வோம் என்றும் தெரிவித்தார்.

**5. திருமதி. நாகராணி, குண்டியாந்தண்டலம் கிராமம்:**

திருமதி. நாகராணி அவர்கள் கூறுகையில், எங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது; மொத்த தூசிகளும் எங்கள் விவசாய நிலத்தில்தான் படிகின்றன என்றும் தெரிவித்தார். கடந்த ஆண்டு தெரிவித்தபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; இந்த ஆண்டு கூறினாலும் அவர்கள் கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இவ்வாறு இருந்தால் நாங்கள் எவ்வாறு பிழைப்பது? என்றும் வினவினார். நாங்கள் கற்களில் வேலை செய்து, கல்மண் சுமந்து எவ்வாறு வாழ முடியும்? என்றும் கேட்டார். நாங்கள் கூறும் கருத்துகளுக்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார். இங்கு 50–க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன; எங்களுக்கு எந்தவித நன்மையும் செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். ஒரு அட்டை மூலம் ஏதேனும் நன்மை செய்ய முடியாதா? என்றும், நாங்கள் பெண்கள் எவ்வாறு பிழைப்பது? என்றும் வினவினார். எங்கள் நிலங்கள் இவ்வாறு பாழாகுவது நியாயமா? என்றும் கேள்வி எழுப்பினார். இதற்கு ஏதேனும் நல்ல வழியை நீங்கள் தான் கூற வேண்டும் என்றும் தெரிவித்தார்..

**6. திரு. பன்னீர்செல்வம், மேனலூர் கிராமம்:**

திரு. பன்னீர்செல்வம் அவர்கள் கூறுகையில், மேனலூர் கிராமம் அறிஞர் அண்ணா அரசு உயர்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத் தலைவராக பணியாற்றி வருகிறேன். எங்கள் கோரிக்கை என்னவென்றால், எங்கள் பள்ளியில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படிக்கின்றனர். குண்டியாந்தண்டலத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிகமாக மேனலூர் பள்ளியில்தான் படிக்கின்றனர். அவர்கள் சென்று வரும் வழியில் காலை மற்றும்

மாலை இரு வேளைகளிலும் சாலைகளில் தண்ணீர் தெளிப்பது போதுமானது எனக் கூறினார்.

**அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.**

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ். S A எண்டர்பிரைசஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 10 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை.**

**சார் ஆட்சியர்,**
**செய்யாறு கோட்டம்,**
**திருவண்ணாமலை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**திருவண்ணாமலை.**